DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 118 of 2021 |
| Deposition of witness for | : | PW8 |
| Name | : | கலைச்செல்வன் |
| Father's Name | : | மாதவன் |
| Village | : | போடூர் |
| Taluk | : | பென்னாகரம் |
| District | : | தருமபுரி |
| Profession | : | காவலர் |
| Age | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 21st day of March 2025.

1, 2 எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :–

நான் தற்போது மகாராஜா கடை காவல் நிலையத்தில் 579 இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து ஒசூர் காவலர் குடியிருப்பில் வசித்து வருகிறேன். வழக்கு சமயத்தில் நான் சூளகிரி காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியாற்றி வந்தேன். எனக்கு சொந்தமான இரு சக்கர வாகனம் TN 24 X 2116 என்ற வாகனம் சம்பவ சமயத்தில் எனக்கு சொந்தமான வாகனத்தை என்னுடைய தம்பி பாரதிமோகன் பயன்படுத்தி வந்தார். ஆஜர் 1 ஆம் எதிரி எனது தம்பி ஆவார். கடந்த 13.02.2020 அன்று நான் சூளகிரி காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது தேன்கனிக்கோட்டை துணை காவல் கண்காணிப்பாளர் சங்கீதா அவர்கள் அழைத்ததாக முகாம் அலுவலகத்தில் இருந்து எனக்கு தகவல் சொன்னார்கள். அன்று இரவு 08.00 மணிக்கு துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் சென்றேன். எனது தம்பி 1 ஆம் எதிரி மீது மதுராஜ ரெட்டி என்பவர் புகார் அளித்திருப்பதாக சொன்னார்கள். அதே போல, இவ்வழக்கு சம்பந்தப்பட்ட வாகனம் உங்கள் பெயரில் உள்ளது, எனவே இந்த வழக்கிற்கும் உங்களுக்கும் தொடர்பு உள்ளதா என்று கேட்டார்கள். சம்பவம் நடந்தது எனக்கு தெரியாது, சம்பவம் நடந்த

சமயத்தில் நான் பணியில் இருந்தேன் என்று சொன்னேன். அப்போது என் பெயரிலுள்ள வாகனத்தை பயன்படுத்தி என் தம்பி காரை நிறுத்தி பணம் கேட்டதாக வழக்கு தொடர்ந்திருப்பதாக தெரிவித்தார்கள். அந்த இரு சக்கர வாகனம் உங்கள் பெயரில் இருப்பதால் உங்களையும் வழக்கில் சேர்க்கலாம் ஆனால் அந்த சமயத்தில் நீங்கள் பணியில் இருந்ததாக எழுதிக் கொடுத்தால், உங்கள் தம்பி மீது மட்டும் வழக்கு போடலாம் என்று சொன்னார்கள், நான் அவர்கள் சொன்னவாறு எழுதிக் கொடுத்தேன். என்னுடைய வாகனத்தை நான் ஓட்டி சென்றேனா என்று காவல் துணை கண்காணிப்பாளர் அ.சா.1 இடம் கேட்டார். அதை மட்டும் விசாரணை செய்தார்கள்.

<u>அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி அனுமதிக்கப்பட்டதன் பெயரில் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.</u>

வழக்கு சம்பந்தமாக சூளகிரி காவல் நிலையத்தில் தகவல் தெரிவித்ததன் பெயரில் தேன்கனிக்கோட்டை DSP அலுவலகம் சென்றீர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கானது அஞ்செட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்டது என்பதை உங்கள் விசாரணையில் தெரிந்து கொண்டீர்கள் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு நீங்கள் அஞ்செட்டி காவல் நிலையம் சென்ற போது, அஞ்செட்டி காவல் ஆய்வாளர் உங்களை விசாரித்தார் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் 1 ஆம் எதிரி தேன்கனிக்கோட்டை காவல் நிலையத்தில் குடியிருந்தார் என்றால் சரிதான். நீங்கள் தேன்கனிக்கோட்டை DSP அலுவலகம் செல்லும் போதே உங்கள் தம்பி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விட்டார்கள் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் உங்களை விசாரித்த நேரத்தில் காவல் குடியிருப்பிற்கு அழைத்து சென்று உங்கள் பெயரில் இருக்கும் இரு சக்கர வாகனத்தை அடையாளம் காட்டி விசாரணை செய்தார்கள் என்றால் சரியல்ல. உங்களது தம்பியின் மற்றொரு எதிரியான கார்த்திகேயன் என்பவரை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கிய விவரம் உங்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உங்கள் தம்பி குற்றவாளி என்பதால், உண்மையான சம்பவங்களை மறைத்து அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. இன்று நீங்கள் பணியில் உள்ளீர்களா என்றால் ஆமாம். நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வேண்டும் என்று அனுமதி வாங்கி வந்தீர்களா என்றால் கிருஷ்ணகிரி DSP முகாம் அலுவலகத்தில் முகாம் எழுத்தரிடம் அனுமதி பெற்று வந்துள்ளேன். இவ்வழக்கில் உங்கள் தம்பியைக் காப்பாற்ற வேண்டி அரசிற்கு எதிராக

பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

1, 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–

இப்போது எங்கு பணிபுரிகிறீர்கள் என்றால் மகாராஜா கடை காவல் நிலையம். நீங்கள் சொன்ன இருசக்கர வாகனம் உங்கள் தகப்பனாரால் வாங்கிக் கொடுக்கப்பட்டது, அதை நீங்களும் உங்கள் தம்பியும் பயன்படுத்தி வருகிறீர்கள் என்றால் ஆமாம். இவ்வழக்கு சம்பந்தமாக தேன்கனிக்கோட்டை DSP அலுவலகம் சென்ற பிறகு அங்கு சொன்ன தகவலின் பெயரில் தான் உங்களுக்கு இவ்வழக்கு பற்றிய விவரம் தெரியும் என்றால் சரிதான். வாகனம் உங்கள் பெயரில் இருப்பதால் நீங்கள் கையெழுத்து போட வேண்டும் என்று சொன்னதால் தான் நீங்கள் கையெழுத்து போட்டீர்கள் என்றால் ஆமாம். மதுராஜ ரெட்டியை விசாரித்ததாகவும், அவர் நீங்கள் வண்டி ஓட்டவில்லை என்று சொன்னதாகவும் சொல்வது தவறு என்றால் சரியல்ல. சம்பவத்தை பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது, மேல் அதிகாரி சொன்னதன் பெயரில் சாட்சியம் சொல்ல வந்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :–

இல்லை.

ஒம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.